**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**அ.வ.எண்.192/2024**

**19.08.2026**

**(பி.வா.சா.1 ) திரு . ராஜவிஜயன்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :- (வாதி தரப்பில்)**

1. நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் வாதியிடம் 29.01.2023 ம் தேதியன்று ரூ.1,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி தொகைக்காக தாவா பிராசரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் வட்டி கொடுத்ததாக சொல்லியுள்ளதற்கு நீதிமன்றத்தில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் G pay மூலமாக 2,3 முறை வட்டி கொடுத்துள்ளேன். நான் எவ்வித வட்டியும் செலுத்தவில்லை என்றும், அதனால்தான் நான் நீதிமன்றத்தில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. என்னுடைய நிரூபண வாக்குமூலம் பத்தி 5 ல் கடந்த 09.07.2023 ம் தேதி வாதியிடம் தொகையை திருப்பிச் செலுத்தியதற்கு எவ்வித ஆணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பணத்தை திருப்பிச் செலுத்திவிட்டேன். எந்த இடத்தில் வைத்து பணத்தை திருப்பி செலுத்தினேன் என்றால், தட்டான்குளத்தில் வைத்துத்தான் பணம் பெற்றேன், அந்த இடத்தில் வைத்துத்தான் பணத்தை திருப்பி செலுத்தினேன். ஆயக்குடியைச் சேர்ந்த முகமது சித்திக் அன்சாரி எனது நண்பர் என்றால் சரிதான். நான் வாதியிடம் பெற்ற கடனை திருப்பிச் செலுத்தாமல் ஏமாற்றவேண்டும் என்பதற்காக எனது நண்பர் முகமது சித்திக் அன்சாரி கடனை திருப்பிச் செலுத்தியபோது உடனிருந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. வாதியிடம் கடனை திருப்பிச் செலுத்திய பின்பு பிராமிசரி நோட்டை திருப்பித் தருவதாக கூறி காலம் தாமதம் செய்தார் என்ற விபரம் கூறியதற்கு காவல்துறையில் நான் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நண்பர் என்ற முறையிலும், என்னுடைய பணி நிமித்தம் காரணமாக புகார் கொடுக்கவில்லை. எனக்கு வாதி கடந்த 21.02.2024ம் தேதியன்று அவசர நிமித்தம் குடும்பச் செலவிற்காகவும், கடனை தீர்ப்பதற்காகவும் ரூ.1,00,000/- பெற்றுக்கொண்டதற்கு அசல் வட்டித்தொகை செலுத்தி வைக்கும்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்ற விரபம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு நான் எவ்வித பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் நான் அவரிடம் பிராமிசரி நோட்டை திரும்பக் கேட்டேன். ஏன் இவ்வாறு வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்று கேட்டேன். வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்பு வாதியின் மீது நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

4. நான் வாதியிடம் கடந்த 29.01.2023ம் தேதி ரூ.1,00,000/- பெற்றுக்கொண்டதற்கு நான் அசலும் வட்டியும் செலுத்திவைக்க கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :- இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

RAJA B

Digitally signed by RAJA B
Date: 2026.08.19 15:05:54 +0530

Additional Sub Judge,
Palani.